# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 120/2014 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 4 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. சுடலைமணி |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of July 2026.

நான் சிறுமளஞ்சியில் வசித்து வருகிறேன். வாழை நார் வியாபாரம் செய்து வருகிறேன். சாட்சி செல்லதுரை என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள எந்த கையொப்பங்களும் என்னுடையது அல்ல. இவ்வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை. எனக்கு வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

15.06.2013 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிக்கு சம்பவ இடமான நம்பியாற்று படுகை அணைக்கரை சுடுகாட்டுக்கு அருகில் நானும் சாட்சி செல்லதுரை என்பவரும் நின்றபோது ஏர்வாடி காவல்நிலைய உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.15 17:46:48 +0530

தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.15 17:46:58 +0530

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 120/2014 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 3 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. செல்லதுரை |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of July 2026.

நான் சிறுமளஞ்சியில் வசித்து வருகிறேன். வாழை நார் வியாபாரம் செய்து வருகிறேன். சாட்சி சுடலைமணி என்பவரை தெரியும். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள எந்த கையொப்பங்களும் என்னுடையது அல்ல. இவ்வழக்கு தொடர்பாக போலீஸார் என்னை விசாரணை செய்யவில்லை. எனக்கு வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

15.06.2013 ஆம் தேதி நண்பகல் 12.00 மணிக்கு சம்பவ இடமான நம்பியாற்று படுகை அணைக்கரை சுடுகாட்டுக்கு அருகில் நானும் சாட்சி சுடலைமணி என்பவரும் நின்றபோது ஏர்வாடி காவல்நிலைய உதவி ஆய்வாளர் சம்பவயிடத்தையும் அதன் சுற்றுபுறங்களையும் எங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.15 17:47:06 +0530

தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.15 17:47:15 +0530

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 120/2014 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 2 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. செல்வின்ஜோஸ் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of July 2026.

நான் தற்போது கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் காவல்நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு ஏர்வாடி காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தபோது 15.06.2013 ம் தேதி காலை 09.00 மணிக்கு உதவி ஆய்வாளர் செயது அலி அவர்கள் தலைமையில் நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் ராமசந்திரன் மற்றும் ஒரு தலைமை காவலர் 1635 ஆகியோர்கள் திருட்டு மணல் தடுப்பு ரோந்து பணியில் சிறுமளஞ்சி நம்பியாற்று படுகையில் திருட்டு மணல் ரோந்து சென்றபோது அணைக்கரை சுடுகாட்டு அருகே வரும்போது எதிரே வந்த TN 72 AD 3180 என்ற பதிவெண்கொண்ட டிப்பர் வாகனத்தில் வந்த 3 பேர் போலீஸ் பார்டியாகிய எங்களை கண்டதும் ஓடஎத்தனித்தவர்களை விரட்டிபிடிக்க முயன்றபோது ஒருவர் பிடிபட்டார். மற்ற இருவர் ஓடி தலைமறைவாகிவிட்டனர். பிடிபட்டவரை விசாரித்தபோது அவர் தான் பேச்சுமுத்து என்றும் வண்டியை ஓட்டிவந்த நபர் என்றும் கூறினார்.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.15 17:47:23 +0530

பின்பு விசாரித்தபோது ஓடிய இருவரின் பெயர்கள் சுடலைக்கண்ணு என்று கூறினார். பின்பு டிப்பர் வாகனத்தை சோதனையிட்டபோது அதில் 1 யூனிட் ஆற்று மணல் இருப்பது தெரியவந்தது. அந்த மணல் எடுத்துசெல்ல எந்தவித அனுமதியில்லாததும் தெரியவந்தது. அந்த இடத்திலேயே உதவி ஆய்வாளர் வழக்கு சொத்துக்களை அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும் கையெப்பமிட்டேன், என்னுடன் வந்த இராமசந்திரன் மற்றும் தலைமை காவலர் 1635 என்பவரும் கையெழுத்து செய்தார். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.2** ஆகும்.

பின்பு வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து இவ்வழக்கின் எதிரிகள் மீது வழக்கு பதிவுசெய்ய நான் உதவியாக இருந்தேன். வழக்கின் எதிரிகளை பார்த்தால் தெரியும். ஆஜர் எதிரிகள் தான் அவர்கள். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நாங்கள் எந்த தகவலின் அடிப்படையில் ரோந்துபணிக்கு சென்றோம் என்றால் உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின்பேரில் ரோந்திற்கு சென்றோம். நாங்கள் ரோந்திற்கு எந்த வாகனத்தில் சென்றோம் என்றால் உதவி ஆய்வாளர் ஒரு இருசக்கர வாகனத்திலும், அதனை தொடர்ந்து நாங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றோம். உதவி ஆய்வாளரின் இருசக்கர வாகனத்தில் அவருடன் யார் சென்றார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. என்னுடைய பைக்கை நான்தான் ஓட்டிசென்றேன் எனாறல் சரிதான். என்னுடைய பைக்கில் யார் வந்தார்கள் என்றால் நான்மட்டும்தான் சென்றேன். மொத்தம் எத்தனை பைக்கில் சென்றோம் என்றால் மூன்று பைக்கில் சென்றோம். எங்களை கண்டதும் எதிரிகள் எவ்வளவு துாரத்தில் வாகனத்தை நிறுத்தினார்கள் என்றால் சுமார் 50 மீ துாரம்.

எதிரி பேச்சிமுத்துவை எவ்வளவு துாரம் விரட்டிசென்று பிடித்தோம் என்றால் 60 மீ. எதிரி வாகனத்தை நிறுத்திய இடத்திற்கும் ஆற்றுக்கும் சுமார் 1/2 கிமீ இருக்குமா என்றால் சுமார் 5 மீ இருக்கும். அத்தாட்சியை உதவி ஆய்வாளர் செயது அலிதான் எழுதினாரா என்றால் ஆமாம். வாகனத்திற்கு எந்த அளவு மணல் இருந்தது என்றால் வாகனத்திற்கு பாடி முழுவதும் இருந்தது. சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையம் சென்றபோது மணலுடன் கூடிய வண்டியில் பேச்சிமுத்துவுடன் யார் என்றால் எனக்கு

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.15 17:47:31 +0530

ஞாபகமில்லை. வண்டியின் முகப்பில் என்ன பெயர் எழுதப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

மணல் எடுத்தது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட கிராமநிர்வாக அலுவலரிடமிருந்து எந்த ஒரு புகாரும் வாங்கவில்லை என்றால் சரிதான். மணல் காய்ந்திருந்ததா அல்லது ஈரமாக இருந்தது என்றால் எனக்கு ஞாபகமில்லை. நான் ரோந்து சென்றவிபரத்தை என்னுடைய பாக்கெட் டைரியை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி பாக்கெட் டைரியை விசாரணையின்போது ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை.

ஆற்று மணலின் மதிப்பு எவ்வளவு என்று துல்லியமாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு ரோந்து சென்றதாக சொல்வதும், சம்பவயிடத்தில் வைத்து எதிரியை கைது செய்ததாக சொல்வதும், அத்தாட்சியை உண்மையில் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்தால் தனிநபர்களிடம் கையெழுத்து வாங்கியிருப்போம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரம், விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சியை காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தோம் என்றால் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரியை சொன்ன நேரம், சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபர கணக்கிற்காக என்னுடைய மேலதிகாரியின் ஆலோசனையின்பேரில் இவ்வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல.

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.15 17:47:35 +0530

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar | |
| Miscellaneous | CC.No. 120/2014 |
| Preliminary register | |
| Sessions | |
| | Prosecution PW 1 |
| Deposition Of Witness for | Defense |
| | Court |
| Name | திரு. இராமசந்திரன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 15th day of July 2026.

நான் தமிழ்நாடு காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வுபெற்று தற்போது ஏர்வாடியில் வசித்து வருகிறேன். நான் இதற்கு முன்பு ஏர்வாடியில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 15.06.2013ம் தேதி காலை 09.00 மணிக்கு நிலைய உதவி ஆய்வாளர் செயது அலி தலைமையில் நானும் தலைமை காவலர்கள் செல்வின் ஜோஸ், ஜான்சன் ஆகியோர்களுடன் சிறுமளஞ்சி ஆற்றுபடுகையில் அணைக்கரை ஊருக்கு கீழ்புறம் உள்ள சுடுகாட்டு பக்கம் ஆற்று மணல் கடத்தல் தடுப்பு தொடர்பாக ரோந்து வந்தபோது நம்பியாற்றியிலிருந்து TN 72 AD 3180 என்ற பதிவெண்கொண்ட டிப்பர் மினிலாரி ஒன்று வேகமாக வந்ததை தடுத்து நிறுத்த முயன்றபோது அந்த லாரியில் இருந்த மூன்று பேர் லாரியை நிறுத்திவிட்டு வேகமாக கீழே குதித்து தப்பி ஓடினார்கள். அவர்களை துரத்தி சென்றபோது மூவரில் ஒருவர் பிடித்துக்கொண்டோம். மற்ற இருநபர்களும் வேகமாக ஓடி காட்டுக்குள் மறைந்துவிட்டார்கள்.

பிடிபட்டவரை விசாரித்தபோது அவர் தன்பெயர் பேச்சிமுத்து என்றும், அந்த மினி லாரியை தான்தான் ஓட்டிவந்தேன் என்றும், மற்ற இருவரும்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN Date: 2026.07.15 17:47:41 +0530

லாரியில் வேலைக்கு வந்தவர்களும் என கூறினார். அதில் ஒருவர் சூரன்குடியைச்சேர்ந்த சுடலைகண்ணு என்றும், இன்னொருவர் கடம்போடுவாழ்வைச்சேர்ந்த சுடலைகண்ணு என்றும் தெரிவித்தார். பின்பு லாரியை சோதனை செய்து பார்த்தபோது அதில் 1 யூனிட் ஆற்று மணல் இருப்பது தெரியவந்தது. மணலை எடுப்பதற்கு அனுமதி ஏதாவது இருக்கறதா என கேட்டபோது இல்லை என்றும், அனுமதி இல்லாமல் எடுத்துசென்றது தெரியவந்தது. அந்த இடத்தில் உதவி ஆய்வாளர் மேற்படி லாரியையும், 1 யூனிட் ஆற்றுமணலையும் தனிநபர்கள் யாரும் இல்லாததால் எங்கள் முன்னிலையில் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார். அந்த அத்தாட்சியில் நானும், தலைமை காவலர்கள் செல்வின்ஜோஸ், இன்னொரு தலைமை காவலரும் கையெழுத்து செய்தோம்.

என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையொப்பம் **அ.சா.ஆ.1** ஆகும். பின்பு எதிரி பேச்சிமுத்து மற்றும் அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களுடன் நிலையம் 11.00 மணிக்கு வந்து குற்ற எண் 135/2013, பிரிவு 379 இதச ன் கீழ் வழக்கு பதிவுசெய்ய உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தோம். சம்பவத்தின்போது கைது செய்யப்பட்ட எதிரி பேச்சிமுத்துவை எனக்கு அடையாளம் தெரியும். ஆஜர் 1ம் எதிரிதான் அவர். இதுசம்பந்தமாக உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

ரோந்திற்கு எந்தெந்த வாகனத்தில் சென்றோம் என்றால் இரண்டு பைக்குகளில் சென்றோம். என்னுடன் யார் வந்தார் என்றால் செல்வின் ஜோஸ் வந்தார். ரோந்திற்கு எத்தனை மணிக்கு காவல்நிலையத்திற்கு சென்றோம் என்றால் காலை 08.30 மணிக்கு சென்றோம். எந்த தகவலின் அடிப்படையில் ரோந்திற்கு சென்றோம் என்றால் காலையில் 08.00 முதல் 08.30 வரை ரோல்கால் என்பதால் அந்த சமயத்தில் மணல் கடத்துவார்கள் என்பதால் ரோந்துபணிக்கு சென்றோம். மினிலாரியின் முன்பக்கம் என்ன பெயர் எழுதப்பட்டிருந்ததா என்றால் அதனை நான் கவனிக்கவில்லை. மினிலாரியை எந்த இடத்தில் நிறுத்தினார்கள் என்றால் ஆற்றிலிருந்து அணைக்கரைக்கு வரும் பாதையில் சுடலைக்கோவிலுக்கு வடபக்கம் நிறுத்தினார்கள். சம்பவயிடத்திற்கு இருபுறமும் விவசாய தோட்டங்கள் உள்ளது என்றால் சரிதான். ஆற்றுமணலை எந்த இடத்திலிருந்து எடுத்துவந்தார்கள் என்பதை நாங்கள் பார்வையிட்டோமா என்றால் இல்லை.

BOOMINATHAN
Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.15 17:47:47 +0530

எதிரி பேச்சிமுத்து வாகனத்தை நிறுத்திவிட்டு அங்கேயே நின்றாரா அல்லது ஓடினாரா என்றால் ஓடினார். எவ்வளவு தூரம் ஓடினார் என்றால் 50 அடி தூரம் ஓடினார். காவல்துறையில் போதிய பயிற்சி பெற்றும் நாங்கள் நான்குநபர்கள் இருந்தும் ஓடிய நபர்களை பிடிக்கவில்லை என்றால் சரிதான். எதிரி பேச்சிமுத்துவை பிடித்தவுடன் காவல்நிலையத்திற்கு கொண்டுசென்றோம் என்றால் இல்லை. மணல் மினிலாரியில் பாதியாக இருந்ததா என்றால் பாதியளவு இருந்தது. மணலின் அளவை பார்த்தவுடன் காவல்நிலையத்திற்கு வந்தோமா என்றால் அருகில் உள்ள நபர்களை விசாரிக்க முயன்றபோது அவர்கள் வரவில்லை, பின்னிட்டு மணலையும், வண்டியையும் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினோம். அத்தாட்சி தயார் செய்வதற்கு வெள்ளைதாளை அங்கிருந்த பெட்டிக்கடையில் வாங்கினோம் என்றால் சரியல்ல.

அத்தாட்சியை யார் எழுதினார் என்றால் இரண்டு தலைமை காவலர்களில் ஒருவர் எழுதினார். நாங்கள் சம்பவயிடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு சென்றபோது என்னுடைய பைக்கில் யார் வந்தார் என்றால் நானும் செல்வின்ஜோஸ்–ம் சென்றோம், உதவி ஆய்வாளர் பைக்கில் ஜான்சன். வண்டியை டிரைவர் ஓட்டிவந்தார். மணல் எடுத்தது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட கிராமநிர்வாக அலுவலரிடமிருந்து எந்த ஒரு புகாரும் வாங்கவில்லை என்றால் சரிதான். மணல் காய்ந்திருந்ததா அல்லது ஈரமாக இருந்தது என்றால் ஈரமாக இருந்தது. கைப்பற்றப்பட்டது மண்ணா அல்லது மணலா என்பதற்காக மண்ணியல் பயிற்சி எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். நான் ரோந்து சென்றவிபரத்தை என்னுடைய பாக்கெட் டைரியை பார்த்தால் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி பாக்கெட் டைரியை விசாரணையின்போது ஆய்வாளரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை.

ஆற்று மணலின் மதிப்பு எவ்வளவு என்று துல்லியமாக எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் சம்பவயிடத்திற்கு ரோந்து சென்றதாக சொல்வதும், சம்பவயிடத்தில் வைத்து எதிரியை கைது செய்ததாக சொல்வதும், அத்தாட்சியை உண்மையில் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்தால் தனிநபர்களிடம் கையெழுத்து வாங்கியிருப்போம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரம், விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. அத்தாட்சியை காவல்நிலையத்தில்

BOOMINATHAN Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.15 17:47:53 +0530

வைத்து தயார் செய்தோம் என்றால் சரியல்ல. வழக்கில் கைப்பற்றப்பட்ட வாகனத்திற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 1ம் எதிரியை சொன்ன நேரம், சொன்ன விதத்தில் கைது செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளிவிபர கணக்கிற்காக என்னுடைய மேலதிகாரியின் ஆலோசனையின்பேரில் இவ்வழக்கு பதிவுசெய்யப்பட்டது என்றால் சரியல்ல.

BOOMINATHAN

Digitally signed by BOOMINATHAN
Date: 2026.07.15 17:48:01 +0530